பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

04. 12. 2021 **SATURDAY** 7 .15 **AM**

வணக்கம். ஆகாஷவாணி -செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உத்தராகண்ட் மாநிலம் டேராடுனில் பதினெட்டாயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.
2. ஒமைக்ரான் தொற்று விரைவாக பரவும் வகையைச் சார்ந்தாலும் அது குறித்து அச்சமடைய தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சாமிநாதன் கூறியுள்ளார்.
3. நாடாளுமன்றத்தின் பொது கணக்குக் குழுவின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் இன்று தொடங்கி வைக்கிறார்.
4. ரயில்கள் மூலம் அதிக அளவு நிலக்கரியை விரைவாக கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.
5. ஆசிய இளையோர் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதலில் இந்தியாவின் அனன்யா பன்சால் வெள்ளி பதக்கம் வென்றார்..

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உத்தராகண்ட் மாநிலம் டேராடுனில் பதினெட்டாயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார். பின்னர் அங்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்கிறார்.

அந்த மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கும் சாலைக் கட்டமைப்பை புதுப்பிக்கவும் முக்கியத்துவம் அளிக்கும் பதினோரு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார். தொலைத் தூர பகுதிகளில் சாலைக் கட்டமைப்பை வலுப்படுத்தவேண்டும் என்ற பிரதமரின் கனவை நனவாக்கும் திட்டங்களாக இவை செயல்படுத்தப்படும். முக்கியமாக தில்லி - டேராடுன் இடையே எட்டாயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதனால் பயண நேரம் ஆறு மணிநேரத்திலிருந்து இரண்டரை மணி நேரமாக குறைக்கப்படும். ஹரித்வார். முஷாபர் நகர், ஷாம்லி யமுனா நகர் பக்வத், மீரட் மற்றும் பராத் வழியாக இந்த விரைவுச் சாலை அமைக்கப்படும். 340 கிலோ மீட்டர் தூரம் நீளமான சுரங்கப் பாதை வழியாக செல்வதால் வனவிலங்குகளுக்கும் வன பாதைகளுக்கும் இடையூறு ஏற்படாது,

மேலும் 700 கோடி ரூபாய் மதிப்பில் டேராடுனில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேம்படுத்தப்படும்.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 7ம் தேதியன்று கோரக்பூரில் ஒன்பதாயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

2016ம் ஆண்டு அவர் அடிக்கல் நாட்டிய கோராக்பூர் உரத் தொழிற்சாலையை அவர் நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பயனற்று கிடந்த அந்த ஆலை எட்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டது. உரத் தயாரிப்பில் இந்தியா தன்னிறைவு காணவேண்டும் என்ற பிரதமரின் நோக்கத்தின் அடிப்படையில் இந்த ஆலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் மூலம் ஆண்டுக்கு 12 புள்ளி 7 லட்சம் மெட்ரிக் டன் வேம்பு பூசிய யூரியா உரம் தயாரிக்கப்படும். பூர்வாஞ்சல் பகுதியில் வாழும் விவசாயிகள் இத்திட்டத்தால் அதிக பயனடைவார்கள்.

கோராக்பூரில் ஏய்ம்ஸ் மருத்துவமனையையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைப்பார். 750 படுக்கை வசதிகளுடன் இந்த மருத்துவமனை செயல்படும். மருத்துவ கல்லூரி. மாணவர்களுக்கான விடுதிகள் ஆயுஷ் கட்டிடம் போன்றவை இந்த வளாகத்தில் இடம் பெறும்.

இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் மண்டல ஆய்வு மையத்தையும் பிரதமர் திரு. மோடி திறந்து வைக்க உள்ளார். மூளைக் காய்ச்சல் அதிகம் உள்ள பகுதி என்பதால் அதற்கான ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படும். தொற்று மற்றும் தொற்று அல்லாத பிற நோய்களுக்கான ஆய்வுகளும் இந்த ஆய்வு மையத்தில் மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

ஓமிக்ரான் வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இந்நோய்த் தொற்று தொடர்பாக கடந்த 2 நாட்களாக நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர், நாட்டில் இதுவரை 2 பேருக்கு மட்டும் ஓமிக்ரான் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று கூறினார்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து பெங்களூரு வந்த ஒருவருக்கும், அதே நகரில் இருந்த மற்றொருவருக்கும் நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுடன் தொடர்பில் இருந்த மற்றவர்களுக்கு தொற்று ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கோவிட்-19 தடுப்பு மருந்துகளை இரண்டு தவணையும் செலுத்திக் கொண்டவர்களுக்கு கூடுதலாக மேலும் தடுப்பு மருந்து செலுத்துவது குறித்து நிபுணர் குழு முடிவு செய்யும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்நிலையில், நாடுமுழுவதும் சர்வதேச விமான நிலையங்களுக்கு வந்திறங்கும் பயணிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், ஒமிக்ரான் தொற்றுள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு. ராஜேஷ் பூஷன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஒமைக்ரான் தொற்று விரைவாக பரவும் வகையைச் சார்ந்தாலும் அது குறித்து அச்சமடைய தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சாமிநாதன் கூறியுள்ளார்.

ஓராண்டுக்கு முன்னர் இருந்த நிலைமையை விட வித்தியாசமான சூழலில் உலகம் இருப்பதாக கூறிய அவர் இந்த தொற்றைக் கையாளுவற்கு தயாராகவும் கவனமாகவும் இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். வேகமாக பரவும் தொற்று என்பதற்கு தென்னாப்பிரிக்காவை உதாரணம் காட்டிய அவர் ஒமைக்ரான் தொற்று இரட்டிப்பாகி வருவதாக சுட்டிக்காட்டினார்.

டெல்டா வைரஸ் தொற்றைக் காட்டிலும் ஒமைக்ரான் வைரஸ் தொற்று அடுத்த சில மாதங்களில் வேகமாக பரவும் என்று ஐரோப்பியா மற்றும் ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கூறியிருப்பதை குறிப்பிட்டார்.

கோவிட் தொற்று தடுப்பூசிகள் தொற்று பரவுதலை குறைத்திருப்பதாக அவர் கூறினார்.

உருமாறிய தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசிகளில் மாற்றம் தேவையில்லை என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் மைக் ரயன் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள தடுப்பூசிகளை அனைவரும் செலுத்திக் கொண்டால் நோய் பரவுதலைக் கட்டுப்படுத்தலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

>>>><<<<

நாடாளுமன்றத்தின் பொது கணக்குக் குழுவின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த விழாவின் போது குடியரசுத் தலைவர் சிறப்பிதழ் ஒன்றை வெளியிடுவார்.

இதில் 15 காமன்வெல்த் நாடுகளிலிருந்து பொது கணக்குக் குழுவின் முக்கியத்துவம் குறித்த பல

கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 1921ம் ஆண்டு முதல் 2021 ம் ஆண்டு வரையிலான கண்காட்சியும் நடைபெற உள்ளது.

இதில் குடியரசுத் துணைத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மற்றும் மாநில சட்டப்பேவை தலைவர்கள் பொது கணக்குக் குழு உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று இக்குழுவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஆதிர் ரஞ்சன் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி. பாரதி பிரவின் பவார் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நடப்பாண்டில் இதுவரை நாடுமுழுவதும் 1 லட்சத்து 64 ஆயிரத்து 103 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>><<<<

சுற்றுச் சூழல் பாதிப்புகளை குறைத்து குறுகிய காலத்தில் ரயில் மூலம் அதிக அளவு நிலக்கரியை விரைவாக கொண்டு செல்வதற்கு 14 திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.

ஜார்க்கண்ட் ஒடிசா சட்டிஸ்கர் மாநிலங்கள் வழியாக இரண்டாயிரத்து 680 கிலோ மீட்டர் தொலைவிற்கு நிலக்கரியை எடுத்துச் செல்வதற்கு இத்திட்டங்கள் வகை செய்யும். இருபத்திரண்டாயிரத்து 67 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தில் ஆண்டுக்கு 410 மில்லியன் டன் நிலக்கரியை கையாள முடியும் . சாலைகள் வழியாக நிலக்கரியைப் போக்குவரத்து செய்தால் சுற்றுச் சூழல் பாதிப்புகள் அதிகமாவதுடன் செலவு கூடுதலாகவும் வாய்ப்புள்ளது.

தற்போதைய நிலையில் நிலக்கரி போக்குவரத்துக்கு கோல் இந்தியா நிறுவனம் மூவாயிரத்து 400 கோடி ரூபாய் கட்டணம் செலவு செய்து வருகிறது. சில நேரங்களில் அளவுக்கதிகமாக சுமை ஏற்றி செல்வதால் விபத்துகளும் அதிகரித்து வருவதாக அரசு கூறியுள்ளது. இதனைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு ரயில். உள்ளூர் நீர்வழிப் போக்குவரத்து மற்றும் கடல் வழிப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் என்று அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

இந்தியா ஐக்கிய அரபு நாடுகளுக்கிடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு கூட்டத்தின் மூன்றாம் சுற்று ஆலோசனைகள் வரும் ஆறாம் தேதி முதல் 10ம் தேதி வரை புதுதில்லியில் நடைபெறும்.

இதற்கான ஆரம்பக் கட்ட பேச்சு வார்த்தைகளில் மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் பங்கேற்றார். புதிய தொழில் திட்டங்கள்.வேலை வாய்ப்பு மற்றும் வர்த்தக துறைகளில் இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

>>>><<<<

வெப்பச்சலனம் காரணமாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏனைய தென் மாவட்டங்கள், மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய உள்மாவட்டங்களில் அனேக இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், வடகடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழையும் பெய்யக்கூடும் என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கக்கடலில் உருவாகியுள்ள ஜாவத் புயல் காரணமாக, மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதி, ஆந்திரா மற்றும் ஒடிசா கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் அந்தப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி இறுதிப் போட்டிக்கு ஜெர்மனியும், அர்ஜென்டினாவும் முன்னேறியுள்ளன.

புவனேஷ்வரில் நேற்று நடைபெற்ற அரையிறுதியில், ஜெர்மனி 4-2 என்ற கோல்கணக்கில் இந்தியாவை வென்றது.

மற்றொரு அரையிறுதியில், அர்ஜென்டினா 3-1 என்ற கோல்கணக்கில் ஃபிரான்ஸை வென்றது.

வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் இந்தியா - ஃபிரான்ஸை எதிர்கொள்ளவுள்ளது.

>>>><<<<

கோவாவில் நடைபெறும் ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் சென்னை - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் கோல் எதுவுமின்றி டிராவில் முடிவடைந்தது.

இன்றிரவு நடைபெறும் ஆட்டத்தில் கோவா – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும், மற்றொரு போட்டியில் பெங்களூரு – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

>>>><<<<

பஹ்ரைனில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதலில் இந்தியாவின் அனன்யா பன்சால் வெள்ளி பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள முதலாவது பதக்கம் இதுவாகும்.

>>>><<<<

இந்தியா-ஏ அணி – தென்னாப்பிரிக்கா-ஏ அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

>>>>END<<<<